FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## தவணைப் பரீட்சை, யூன் - 2019

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

| தரம் :- 13 (2019) | தொடர்பாடலும் ஊடககற்கையும் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ ***1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.***

01. தகவல் அடங்கிய குறியீடுகளினை அடிப்படையாகக் கொண்டு இருசாராருக்குமிடையில் ஒரேமாதிரியான ஒருமித்த மனநிலையை ஏற்படுத்துவதே தொடர்பாடலாகும் எனும் விளக்கத்தினை முன்வைப்பர்
   1) ஹரோல்.டி.லாஸ்வெல் 2) ஷனோன் மற்றும் வீவர் 3) வில்பர் ஷ்ராம்
   4) சாள்ஸ் கூலி 5) ஒக்ஸ்போர்ட் அகராதி

02. தொடர்பாடல் செயலொழுங்கு ஒன்றில் தாக்கம் / விளைவுக்கு அதிமுக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அந்த வகையில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கும் அறிஞர்கள் முறையே.
   1) ஹரோல்.டி.லாஸ்வெல், வில்பர்ஷ்ராம் 2) அரிஸ்ரோட்டில், பிளேற்றோ
   3) குளோட் ஷனோன் மற்றும் வொரன் வீவர் 4) ஹரோல்.டி.லாஸ்வெல், அரிஸ்ரோட்டில்
   5) வில்பர் ஷ்ராம், டேவிட் K. பெர்லோ

03. ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம் அவர்களினால் முன்வைக்கப்பட்ட விளக்கத்தில் பொருந்தாத தன்மை உடைய கூற்று
   1) இருவழிச் செயன்முறையுடன் தொடர்புடையது.
   2) பின்னூட்டச் செயன்முறையை ஆதரிக்கின்றது.
   3) நேர்கோடல்லாத விதங்களை முன்னிலைப்படுத்துகிறது.
   4) நான்கு மூலதத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது.
   5) ஒரு வழித்தொடர்புத்தன்மையை வெளிப்படுத்தியிருப்பது.

04. ஆரம்பகாலத் தொடர்பாடல் பலவித படைப்பாற்றல் தன்மை கொண்டதாக காணப்பட்டுள்ளது. மேற்படி விடயத்துடன் தொடர்புடைய குகை ஓவியங்களை சரியாக இனங்காட்டும் தொகுதி.
   1) சிகிரியாகுகை ஓவியம், அல்ரமீரா குகை ஓவியம்.
   2) லெஸ்கோ குகை ஓவியம், அல்ரமீரா குகைஓவியம்.
   3) அஜந்தா குகை ஓவியம், ஸ்பெயின் குகை ஓவியம்.
   4) அல்ரமீரா குகை ஓவியம், சித்தன்னவாசல் குகை ஓவியம்.
   5) எல்லோரா குகை ஓவியம், லெஸ்கோ குகை ஓவியம்.

05. தொடர்பாடல் வளர்ச்சியில் அச்சு ஊடக மொழி அறிமுகம் நவீன தொடர்பாடல் செயன்முறைகளுக்கு வலுவூட்டியது. இங்கு அச்சுக்கலை மற்றும் அச்சியந்திரத்தை பயன்படுத்தி முதன் முதல் வெளிவந்த நூல்கள்.
   1) வஜ்ர சூத்திரம், இலத்தீன் இலக்கணம்
   2) இலத்தீன் இலக்கணம், விவிலியம் (பைபிள்)
   3) லன்தேசி, மாசிகதெக்க
   4) வஜ்ர சூத்திரம், விவிலியம் (பைபிள்)
   5) உதயபாணு, இந்துசாதனம்

agaram.lk

06. பின்வரும் கருத்துக்களுடன் தொடர்புடைய தொடர்பாடல் வகையை குறிப்பது.

- தொடர்பாடப்படும் விடயம் தொடர்பான முன்னாயத்தம் இருத்தல்.
- பல்வேறு தொடர்பாடல் கருவிகளைப் பயன்படுத்த முடிதல்.
- வாய்மொழி சாராத தொடர்பாடல் வழிமுறைகளினை பயன்படுத்துதல்.
- கலங்கரை விளக்க உபாய முறை பயன்படுத்தப்படுதல்.
- பெறுநரை மையப்படுத்திய தொடர்பாடல்.

1) ஆளுள் (தனியாள்) தொடர்பாடல்
2) ஆட்களிடைத் தொடர்பாடல்
3) குழு (கூட்டுத்) தொடர்பாடல்
4) வெகுசனத் தொடர்பாடல்
5) முறைசாரா தொடர்பாடல்

07. ஒருவரை ஒருவர் அறிந்திராத விசால மக்கள் கூட்டத்திற்கு வெகுசன ஊடகங்களினை பயன்படுத்தி ஒரே தடவையில் தகவல்களை வழங்கும் செயற்பாடு வெகுசன தொடர்பாடலாகும் என விளக்கமளிப்பவர்கள் முறையே

1) ஹரோல்.டி.லாஸ்வெல், குளொட் ஷனான், வொரன் வீவர்.
2) டட்ளி சியர்ஸ், ஜோன் டூவி, விமல்திசநாயக்கா
3) அரிஸ்ரோட்டில், டேவிட்.கே.பெர்லோ, லசார் பெல்ட்.
4) டெனிஸ் மக்குவல், மார்ஸல் மக்லுஹன், செய்த்பெய்சன்.
5) ஹாய்பார்ட், அண்குராய்ட், போன்

08. அரசாங்கத்தகவல் திணைக்களத்தின் உருவாக்கம் பற்றி குறிப்பிடப்படும் அம்சங்களுள் பொருந்தாது

1) அரசுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்பை உயர்மட்டத்திற்கு கொண்டு வருதல்.
2) அரசாங்கத்தின் பணிகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டல்.
3) பொதுநலவாய நாடுகளின் பிரதிகளுக்கு தகவல் வழங்காமை.
4) அரச திரைப்பட பிரிவின் கருமங்களை ஒழுங்குபடுத்துதல்.
5) அரச வெளியீடுகளை வெளியிடுதல், சந்தைப்படுத்தல்.

09. பொதுமக்கள் தொடர்பு நிறுவனம் ஒன்றின் வேலைத்திட்டங்கள் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் அதன் வாயிலாக நிறுவன நன்மதிப்பு உயர்த்துவதற்கும் ஏதுவான வெளியகப் பொதுசனத் தொடர்பை மாத்திரம் கொண்ட தொகுதி.

1) ஊழியர் ஒன்றுகூடல், அனுசரணை, விளம்பரம், கண்காட்சி.
2) பத்திரிகை புகைப்படம், கண்காட்சி, அனுசரணை, செய்திமடல்.
3) அறிவிப்பு பலகை, நலன்புரி அமைப்புகள், சுற்றுலாக்கள், கண்காட்சி.
4) அனுசரணை அறிவிப்பு பலகை, கண்காட்சி, விளம்பரம்.
5) செய்திமடல், நேரடி தொலைபேசி இலக்கம், அனுசரணை, சுற்றுலாக்கள்.

10. நாட்டின் தேசிய பாடசாலை ஒன்றின் அதிபர் காலைப் பிரார்த்தனை கூட்டத்தில் உரையாற்றும் போது க.பொ.த உயர்தர கலைப்பிரிவில் முதன் நிலை பெற்ற தமது பாடசாலை மாணவனை புகழ்ந்து பேசியதுடன் அம்மாணவனை அனைத்து மாணவர்களுக்கும் பெருமையுடன் அறிமுகப்படுத்தினார். இச் செயற்பாடு அம் மாணவருக்கு

1) விளம்பரம் தேடும் ஒரு வழிமுறையாகும்.
2) ஆழ்பரிவுடன் தொடர்புபடுவது ஆகும்.
3) பார்வை நோக்கு தொடர்பானதாகும்.
4) தனியாள் விம்பச் செயற்பாடாகும்.
5) சமூக அங்கீகாரம் தொடர்புபடுவதாகும்.

11. பண்பாடு என்பது உபகரணங்கள் நுகர்வுப் பொருட்கள் பல்வேறு சமூகக்குழுக்களின் கட்டமைப்பு இயல்புகள் மானிட எண்ணங்கள் நுட்பங்கள் நம்பிக்கைகள் சடங்குகள் இணைந்த தொகுப்பு என வரைவிலக்கணப்படுத்தியவர்.

1) எட்வார்ட் ரெய்லர்
2) புரோன்னி மலினோவுஸ்கி
3) ரல்ப் லிண்டன்
4) பேராசிரியர் விமல் திசநாயக்கா
5) ஆனந்த குமாரசாமி

agaram.lk

12. தொடர்பாடல் செயன்முறைகளில் குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பில் ஆரம்பத்தில் கவனம் செலுத்திய அறிஞர்கள்.
   1) ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
   2) குளோட் ஷனோன் மற்றும் வொரன் வீவர்
   3) எட்வேர்ட் சப்பியர்
   4) ஹரோல், டி. லாஸ்வெல்
   5) டேவிட் K. பெர்லோ

13. ஏனைய தகவல் பரிமாற்ற வகைப்பாடுகளுக்கு அடிப்படையான தொடர்பாடல் வகை
   1) ஆளுள் (அகமுகி) தொடர்பாடல்
   2) ஆட்களிடை (ஆளிடை) தொடர்பாடல்
   3) கூட்டுத் (குழு) தொடர்பாடல்
   4) வெகுசனத் தொடர்பாடல்
   5) மெய்நிகர் தொடர்பாடல்

14. ஒரு விபத்துச் சம்பவம் பற்றிய விடயம் வெகுசன ஊடகங்கள் வழியாக பல்வேறுபட்ட தன்மைகளில் செய்தியாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இச் செயற்பாட்டோடு தொடர்புபடும் விடயம்.
   1) அறிக்கையிடல் 2) உரிமையாண்மை 3) விமர்சனம்
   4) வாயிற்காப்பு 5) செம்மையாக்கம்

15. ஆளிடைத் தொடர்பு கொள்ளல் செயற்பாடுகளின் போது செவிமடுத்தல் செயற்பாடு பெறுநரை மையப்படுத்திய நிகழ்வாகும். இந்த வகையில் செவிமடுத்தல் செயல் ஒழுங்கை வரிசைக்கிரமமாக வெளிப்படுத்தும் அம்சம்.
   1) கேட்டல், துலங்குதல், மதிப்பிடுதல், எதிர்விளைவு
   2) கேட்டல், விளங்குதல், எதிர்விளைவு, மதிப்பிடுதல்
   3) கேட்டல், விளங்குதல், மதிப்பிடுதல், எதிர்விளைவு
   4) மதிப்பிடுதல், விளங்குதல், கேட்டல், எதிர்விளைவு
   5) மதிப்பிடுதல், கேட்டல், துலங்கல், எதிர்விளைவு

16. மனதின் செயற்பாடுகளின் தன்மை பற்றி உளப்பகுப்பாய்வு கோட்பாட்டினை முன்வைத்து விளக்கமளிக்கும் உளவியல் சிந்தனையாளர்
   1) ஆபிரகாம் மாஸ்லோ 2) ஜோவரன் கல்துங் 3) டானியல் லேனர்
   4) சிக்மன் பிராய்ட் 5) லூசியன் பை

agaram.lk

17. மொழி விருத்தியில் எழுத்து மொழி அறிமுக ஒரு பொற்காலமாகும். அந்த வகையில் எழுத்து மொழி ஆரம்பம் தொடர்பில் உருவ எழுத்துக்கள் தனித்துவம் பெறுகின்றன. இவை இன்றும் பயன்படுத்தும் பிரதேசங்களை கொண்ட தொகுதி
   1) இலங்கை, இந்தியா, சீனா 2) சீனா, கொரியா, யப்பான் 3) சீனா, இலங்கை, இலண்டன்
   4) இந்தியா, கொரியா, சீனா 5) அரபு இராச்சியம், ஐக்கிய இராச்சியம், சீனா

18. ஒரு பண்பாட்டினை கட்டியெழுப்புவதற்கு வேறு பண்பாட்டியலின் நவீன மயப்படுத்தல்கள் அல்லது கண்டுபிடிப்புக்கள் சேர்த்துக் கொள்ளப்படும் தன்மையை அழைப்பது.
   1) எதிர்ப் பண்பாடு 2) பண்பாட்டு திணிப்பு 3) பண்பாட்டு தேக்கம்
   4) பண்பாட்டு விருத்தி 5) பண்பாட்டு உறுதுணை

19. 
   - ஆசிய ஆபிரிக்க வலய பண்பாட்டு பெறுமாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை
   - மேலைத்தேய பண்பாடு உயர்வாக மதிப்பிடப்பட்டுள்ளமை.
   - கீழைத்தேய வாதம் நிந்திக்கப்படுதல்
   - மேலைத்தேய வாதம் சமூகமயமாக்கப்படுதல்

   மேற்குறித்த கருத்தியல் வெளிப்படுகளுடன் தொடர்புடைய பண்பாட்டு அம்சத்தினை வெளிப்படுத்துவது
   1) பண்பாட்டு பரிமாற்றம் 2) பண்பாட்டு ஆக்கிரமிப்பு
   3) பண்பாட்டு சுற்றோட்ட சமமின்மை 4) பண்பாட்டு ஆர்முடுகல்
   5) பண்பாட்டு மாறா எண்ணக்கரு

20. தவறான கூற்றை தெரிவு செய்க.
1) எழுத்து மொழித் தொடர்பாடல் மொழி, குறிமுறைகளை அடிப்படையாக கொண்டது.
2) பேச்சுத் தொடர்பாடல் எழுத்து தொடர்பாடலை உள்ளடக்கியிருக்க மாட்டாது.
3) வாய் மொழித்தொடர்பு எழுத்து தொடர்பாடலை உள்ளடக்கியிருக்க மாட்டாது.
4) வாய் மொழிசாராத் தொடர்பு உடல்மொழி சைகைமொழி அடிப்படையானது.
5) வாய்மொழித் தொடர்பாடல் வாய்மொழி சாராத் தொடர்பாடலின் அம்சங்களை உள்ளடக்கியிருக்கும்.

21. நாட்டார் பாடல்கள் தொடர்பான பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
1) அவை அன்றாடத் தொடர்பாடலில் பயன்படுத்தக் கடினமானவை.
2) அவை மனித அறிவு சிந்தனையுடன் தொடர்புடையவை அல்ல
3) சந்தம், அமைப்பு, ஓசை முக்கியமானவை அல்ல
4) ஒரே ஒரு வடிவத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டவை.
5) மனித மன உணர்வுகளோடு இரண்டறக் கலந்த வடிவம்.

22. புலமைசார் சொத்துச்சட்டத்தின் படி அறநெறி உரிமைகள்
1) ஆக்கியோனின் அடையாளத்துடன் தொடர்புள்ளனவாகும்.
2) தேவையாயின் கைமாற்றம் செய்ய முடியும்.
3) நிதிசார் ஆதாயங்களை பெற்றுத்தரும்.
4) சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாதவையாகும்.
5) எமது நாட்டிற்கு பொருத்தமானதல்ல

23. செய்திப்பத்திரிகை ஒன்றினை வகைப்படுத்துகின்ற போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமல்லாதது.
1) அச்சிடப்படும் காலப்பகுதி
2) செய்திப்பத்திரிகையின் அளவு
3) வாசகர்களின் தன்மை
4) பக்கங்களின் எண்ணிக்கை
5) வெளிவரும் செய்திகளின் தன்மை

24. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தான் பார்த்த கவனத்தை கவர்ந்த இடமொன்றுக்கு விஜயம் செய்ய விருப்பட்ட ரஸ்ரீபன், தனது நண்பன் யதுசனை சந்தித்து அது பற்றி கூறினான். அதற்கு தனது பெற்றோருடன் கலந்துரையாட வேண்டும் என யதுசன் பதில் அளித்தான். இந்தச் சந்தர்ப்பத்துடன் தொடர்புடைய தொடர்பாடல் வகைகள் வரிசைப்படுத்த கூடுமாக இருப்பது.
1) வெகுசன தொடர்பாடல், ஆளுள் தொடர்பாடல், ஆட்களிடை மற்றும் குழுத் தொடர்பாடல்.
2) ஆளுள் தொடர்பாடல், வெகுசன தொடர்பாடல், ஆட்களிடை மற்றும் குழுத் தொடர்பாடல்.
3) வெகுசன தொடர்பாடல், ஆட்களிடை தொடர்பாடல், குழு மற்றும் ஆளுள் தொடர்பாடல்.
4) வெகுசன தொடர்பாடல், ஆட்களிடை தொடர்பாடல், ஆளுள் மற்றும் குழுத் தொடர்பாடல்.
5) வெகுசன தொடர்பாடல், குழுத் தொடர்பாடல் ஆளுள் மற்றும் ஆட்களிடைத் தொடர்பாடல்.

25. தொலைக்காட்சி செய்தி அறிக்கைகள் பற்றி வகுப்பறையின் மாணவர்கள் வெளியிட்ட சில பார்வைகள் கீழே தரப்படுகின்றன.

கவிதா :- அறிக்கையிடப்படும் நிகழ்வு பற்றிய நம்பகத்தன்மை காட்சிப்படுத்தப்படும் படங்களில் தங்கியுள்ளது.

ராணி :- அது தனக்கேயுரித்தான அறிக்கை முறைமையைக் கொண்டுள்ளது.

தேவி :- அலைவரிசையின் கொள்கைகளால் செய்திகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தின் தன்மை தீர்மானிக்கப்பட முடியும்.

வாணி :- செய்தியை அளிக்கை செய்பவரின் உடல் மொழியும் உணர்வுகளும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது மிக முக்கியமானது.

இவற்றிலிருந்து சரியான கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டது.
1) கவிதா, மற்றும் ராணி ஆகியோரால்
2) ராணி மற்றும் தேவி ஆகியோரால்
3) கவிதா, ராணி, மற்றும் தேவி ஆகியோரால்
4) கவிதா, ராணி, மற்றும் வாணி ஆகியோரால்.
5) கவிதா, ராணி, தேவி, மற்றும் வாணி ஆகியோரினால்

agaram.lk

26. தொடர்பாடல் வளர்ச்சி கால கட்டங்களில் முக்கியமான வகிபங்குகளை பெற்றும் கொண்ட அறிஞர்கள் பின்வருமாறு ட்சாயி லூன், ஜோஹானஸ் குட்டன் பேர்க், குக்லியெல்மோ மார்க்கோணி, சார்ளிசப்ளின் ஆகியோர் முறையே தொடர்புபடுவது
1) வஜ்ர சூத்திரம், செய்திப்பத்திரிகை, வானொலி, சினிமா.
2) கடதாசி, செய்திப்பத்திரிகை, சினிமா, வானொலி
3) செய்திப்பத்திரிகை, கடதாசி, சினிமா, வானொலி
4) கடதாசி, செய்திப்பத்திரிகை, வானொலி, சினிமா
5) வானொலி, கடதாசி, செய்திப்பத்திரிகை, சினிமா

27. இலங்கை வரலாற்றியலில் 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள மொழி மற்றும் பௌத்த மத்திற்கு முன்னுரிமை அளித்தல் தொடர்பான விடயங்கள் சட்டங்களாக அமுல்ப்படுத்தப்பட்டன. இச் செயற்பாடு பண்பாட்டியலலோடு தொடர்புபடுவது
1) பண்பாட்டு அதிர்வு
2) பண்பாட்டு விருத்தி
3) பண்பாட்டு பரிமாற்றம்
4) பண்பாட்டு மாறா எண்ணக்கரு
5) பண்பாட்டு ஆக்கிரமிப்பு

28. அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு வீணாக்குவது மற்றும் ஊழல்களை குறைப்பதற்கு மக்கள் பங்குபற்றல் உச்சப்படுத்தப்படுதல் என்ற கோட்பாட்டியலை அடிப்படையாக கொண்டு உருவாகிய இயக்கம் பின்வருவனவற்றுள் எது?
1) சமுர்த்தி இயக்கம்
2) சர்வதோய இயக்கம்
3) சணச இயக்கம்
4) கிராம அபிவிருத்திச் சங்கம்
5) கூட்டுறவுச்சங்க இயக்கம்

29. அபிவிருத்தி தொடர்பாடல் செயற்றிட்ட அறிக்கை ஒன்றானது எதிர்கால திட்டங்களுக்கு முக்கிய காரணம். அது
1) இலக்குகள் மற்றும் குறிக்கோள் விடயங்களை உள்ளடக்கி இருத்தல்.
2) அனுசரனை வழங்குவோரின் விபரங்களை குறிப்பிட்டிருத்தல்.
3) தோன்றிய பிரச்சனைகள் குறைபாடுகளை உள்ளடக்கியிருத்தல்.
4) செயற்றிட்ட குழு பற்றிய விபரத்தை வழங்குதல்.
5) அச்சிடப்பட்ட நூல் வடிவத்தில் இருத்தல்.

30. மாற்று ஊடகம் தொடர்பிலான பொருத்தமில்லாத கூற்று
1) கருத்தியல் சார் நிலைப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கும்.
2) பிரசித்த பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருக்கும்.
3) பிரதான துறை ஊடகங்களுக்கு எதிரான தன்மை கொண்டது.
4) சமூக நோக்கங்களினை அடிப்படையாகக் கொண்டது.
5) அதிகாரவாத தன்மைகளுக்கு எதிரான அல்லது புறம்பான தன்மையில் தொழிற்படுவது.

31. முரண்பாடுகள் ஒரு வரம் என முரண்பாட்டுத்தீர்வுக்கான நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த வகையில் ஜோஹான் கல்துங் அவர்களினால் முன்வைக்கப்பட்ட மோதல் முரண்பாட்டு முக்கோணியில் உள்ள அம்சங்களை குறிப்பது.
1) கட்டமைப்பு, உடன்பாடு, நடத்தை
2) கட்டமைப்பு, சூழல், உளப்பாங்கு
3) சூழல் / சந்தர்ப்பம், உளப்பாங்கு, உடன்பாடின்மை.
4) சூழல் / சந்தர்ப்பம், உளப்பாங்கு, நடத்தை
5) கட்டமைப்பு, சூழல் / சந்தர்ப்பம், உளப்பாங்குகள்

32. பிரசித்தமான பண்பாடு (Popular culture) பற்றிய பொருத்தமற்ற கூற்றாக அமைவது.
1) வர்த்தக நோக்கங்களினை அடிப்படையாகக் கொண்டது.
2) பெண்கள் சிறுவர்களினை கவர்ந்திருழுக்கக் கூடியது.
3) வெகுசன ஊடகங்களின் வாயிலாக பரவலடையக்கூடியது.
4) உடனடியாக மாற்றங்களுக்கு உட்படக்கூடியதொன்று
5) உள்நாட்டு பண்பாட்டு அம்சங்களையே பிரதானமாக கொண்டிருக்கும்

agaram.lk

- ***33 தொடக்கம் 36 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரைபடத்தை பயன்படுத்துக.***

**D** ← **C** ← **B** ← **A**

33. மேற்குறித்த மாதிரியில் உள்ளடங்கியுள்ள ஒவ்வொரு மூலாதாரத்துடனும் இணைந்ததாக ஐந்து பண்புகள் வீதம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய ஒரேவிதமான பண்புகளை வெளிப்படுத்துவது.
   1) A, B ஆகியன   2) A, D ஆகியன   3) B, C ஆகியன
   4) B, D ஆகியன   5) A, C ஆகியன

34. மேற்படி மாதிரியில் பின்னூட்டம் உள்ளீர்க்கப்படுமாயின் அதனை புலப்படுத்தும் அம்சமும் குறிமுறைய விழ்ப்புச்சூழலை வெளிப்படுத்தும் ஆங்கில எழுத்து
   1) A   2) B   3) C   4) D   5) மேற்கூறிய எதுவுமில்ல

35. மேற்படி மாதிரியில் கண், காது, வாய், மூக்கு, தோல் ஆகிய ஐம்புலன்கள் வெளிப்பாடுகள் தொடர்புபட்டு அமையும் பகுதியை குறிப்பது.
   1) A   2) B   3) C   4) D   5) மேற்கூறிய அனைத்தும்

36. மேற்படி மாதிரி உருவினை ஒத்ததாக தொடர்பாடல் விளக்கத்தினை முன்வைத்து விளக்கமளிப்பவர்கள்
   1) ஹறோல். டி. லாஸ்வெல்   2) குளோட் ஷனொன் மற்றும் வொரன் வீவுர்
   3) டேவிட். K. பெர்லோ   4) அரிஸ்ரோட்டில்
   5) ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்

37. பின்வரும் கூற்றுக்களை கவனமாக வாசிக்குக.
   A - ஒருவரின் செயற்பாடுகள் மீது கழிவிரக்கப்பார்வை
   B - நண்பர்கள் இருவர் தனது இன்பதுன்பங்களை பகிர்தல்.
   C - தனது பேச்சினால் மற்றவர்களினை வசீகரப்படுத்துதல்
   இவை தொடர்புபட்டு அமையும் விடயங்கள்.

   1) A – ஆழ்பரிவு,   B – தன்வயப்படுத்துதல்,   C – ஒத்துணர்வு
   2) A – ஒத்துணர்வு   B – ஆழ்பரிவு,   C – தன்வயப்படுத்துதல்,
   3) A – ஆழ்பரிவு,   B – ஒத்துணர்வு   C – நிலைமாறுதல்
   4) A – துக்கம்   B – புலக்காட்சி   C – துருவநிலை
   5) A – ஆழ்பரிவு   B – ஒத்துணர்வு   C – தன்வயப்படுத்தல்

38. அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய கருத்தாக்கத்தில் அபிவிருத்தி தொடர்பாடல் என்பது நாடு ஒன்றில் துரிதமான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய மனித தொடர்பாடலுக்கு உரிய கலை அல்லது விஞ்ஞானம் ஆகும் என வரைவிலக்கணப் படுத்தியவர்கள்
   1) பிலிப்பைன்ஸ் அரச பல்கலைக்கழகம்   2) யுனஸ்கோ
   3) ஐரோப்பிய ஒன்றியம்   4) போல். பீ. ஸ்டீவன்
   5) டானியல் லேணர்

39. பின்வரும் நாட்டாரியல் கலைவடிவங்களில் சிங்கள கிராமிய கலைவடிவங்களுடன் தொடர்புடைய பகுதி.
   1) வசந்தன் கூத்து, கோலம், சொக்கரி
   2) கோலம், சொக்கரி, பலி
   3) வசந்தன் கூத்து, பறைமேளக்கூத்து, நாடகம
   4) பலி, மகிடிக்கூத்து, சொக்கரி
   5) வசந்தன் கூத்து, பறைமேளக்கூத்து, கோலம்

agaram.lk

40. கீழுள்ள ஊடக விளங்கறிவு தொடர்பிலான சில கூற்றுக்களாகும்.

A - ஊடக விளங்கறிவு பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையாகும்.

B - ஊடக விளங்கறிவு இலத்திரனியல் ஊடகத்துடன் தொடர்புடையது.

C - ஊடக விளங்கறிவு ஊடக உள்ளடக்கத்தைப் புரிந்துணர்வுடன் பயன்படுத்துவதாகும்.

D - செய்திகளை உருவாக்குதல் திறனாய்வுக்குட்படுத்துதல் ஆகியன இதன் பிரதான பகுதியாக அமையமாட்டாது.

மேற்படி கூற்றுக்களில்

1) A மாத்திரம் உண்மையாகும்.
2) B மாத்திரம் உண்மையாகும்.
3) A, B ஆகியன உண்மை. அதேவேளை C, D பொய் ஆகும்.
4) A, C உண்மையாகும் அதேவேளை B, D பொய் ஆகும்
5) A, B, C உண்மையாகும் அதேவேளை D பொய் ஆகும்.

41. இலத்திரனியல் ஊடகம் தொடர்பான வகுப்பறைக் கலந்துரையாடல் ஒன்றில் வெளிப்படுத்தப்பட்ட சில கருத்துக்கள் வருமாறு.

நிமல் - இலத்திரனியல் ஊடகத்தின் பிரதான கருவி மொழி ஆகும்.

கமல் - வீடியோக்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு என்பன இதனுடன் இணைக்க முடியும்.

அமல் - இலத்திரனியல் ஊடகமானது வானொலி தொலைக்காட்சி தேவையேற்படின் சினிமாவும் உள்ளடங்கும்.

ரமல் - ஒப்பீட்டு ரீதியாக இலத்திரனியல் ஊடகம் வலுவான செயற்பாடு மிக்க ஊடகம்

விமல் - பெரும்பாலும் பொழுது போக்கு சார்பான விடயங்களினை பிரதானமாக உள்ளடக்கியிருப்பது.

இவற்றுள் இலத்திரனியல் ஊடகம் சார்பான கருத்துக்களினை முன்வைத்தோர்.

1) நிமல், கமல், அமல், ரமல் ஆகியோராவார்.
2) கமல், அமல், ரமல், விமல், ஆகியோராவர்.
3) நிமல், கமல், அமல், விமல் ஆகியோராவார்.
4) நிமல், கமல், ரமல், விமல் ஆகியோராவார்.
5) நிமல், கமல், அமல், ரமல், விமல் ஆகிய அனைவருமாவார்.

42. பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.

A - வேலைகளின் இலக்கை பூர்த்தி செய்ய முடியாது போதல்

B - நபர்களை இழத்தல்

C - எந்தவொரு காரணமும் இல்லாமல் ஏதேனும் விருப்பமற்ற ஒன்றினை எதிர்கொள்ளுதல்

D - எதிர்பார்க்கப்படும் மட்டங்களில் வாழ்வதற்கு முடியாமை.

மேற்குறித்த அம்சங்களினை வெளிப்படுத்தி நிற்கும் உளரீதியான தன்மைகளுடன் தொடர்புடையவை.

1) உளப்பதற்றம், உளதாக்கம், மன உளைச்சல், உளர்சோர்வு
2) உளத்தாக்கம், உளப்பதற்றம், உளச்சோர்வு, மன உளைச்சல்
3) மன உளைச்சல், உளச்சோர்வு, உளப்பதற்றம், உளத்தாக்கம்
4) உளப்பதற்றம், உளத்தாக்கம், மன உளைச்சல், திகைப்படைதல்.
5) அதிகரத்தழுத்தம், உளத்தாக்கம், நீரிழிவு, உளச்சோர்வு

43. அனைத்து மனிதர்களும் பிறப்பில் சமமாணவர்கள், எந்தவொரு நன்மையும் செய்யாதிருப்பினும் தீய சொற்களால் மற்றவர்களை வஞ்சிக்காமல் இருத்தல் வேண்டும். என மனச்சமாதானம் தொடர்பான கருத்தியலில் முன்னிலைப்படுத்தும் சமயம்.

1) இந்துசமயம் 2) இஸ்லாமிய சமயம் 3) பௌத்த சமயம்
4) கிறிஸ்தவ சமயம் 5) மேற்கூறிய எவையும் அல்ல

agaram.lk

44. தற்போதைய ஊடகப் பண்பாட்டில் விருத்தியடைந்திருக்கும் இணைந்த ஊடகவியல் (Onvergence media) போக்கிற்கு பிரதான காரணமாவது.
   1) ஊடக அலைவரிசைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு.
   2) தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கு செல்லிடத்தொலைபேசிகளை பயன்படுத்துவதில் பெறுநர்கள் கொண்டிருக்கும் ஆற்றல் அதிகரிப்பு.
   3) இணையத்தின் பரவலாக்கம்
   4) தொடர்பாடல் காட்சி வழிப்போக்கின் அதிகரிப்பு
   5) பூகோளமயமாக்கத்தின் அதிகமான பாதிப்பு

45. ஊடக விளங்கறிவு என்பது ஊடகத்தினால் சகல விதங்களிலும் முன்வைக்கப்படும் செய்திகளை நுகர்வதற்கு பகுத்தாராய்வதற்கு மதிப்பிடுவதற்கு மற்றும் நிர்மாணிப்பதற்கு பெற்றுக் கொள்ளப்படும் ஆற்றல் என வரைவிலக்கணப்படுத்துபவர்.
   1) யுனஸ்கோ நிறுவனம்
   2) ஐரோப்பிய ஆணைக்குழு
   3) பிலிப்பைன்ஸ் அரசபல்கலைக்கழகம்
   4) ஹவாய்ட் பல்கலைக்கழகம்
   5) பெல்சில்வேனியாப் பல்கலைக்கழகம்

46. நடிப்பு தொற்றம் பெறுவதற்கு அபிநயங்கள் அவசியமானது ஆகும். அந்த வகையில் பின்வரும் அபிநய வகைப்பாடுகளுள் வாய்மொழி சாராத வெளிப்பாட்டினை மாத்திரம் புலப்படுத்தி நிற்பதல்லாதது.
   1) ஆங்கீகம் 2) வாசீகம் 3) சாத்வீகம் 4) ஆகார்யம் 5) காமீகம்

47. வானொலி செய்தி ஒலிபரப்பில் பயன்படுத்தப்படும் மொழியின் ஒரு பலவீனமாக கொள்ளக்கூடியது.
   1) எளிமையான மொழிநடை பயன்படுத்தப்படும்.
   2) கற்பனைத்திறன் மிக்க மொழிநடை பயன்படுத்தப்படும்.
   3) பேசுதலும் கேட்டலும் சமநேரத்தில் இடம்பெறும்.
   4) அனைவராலும் இலகுவாக பெறுகை செய்யக்கூடியது.
   5) மீள அதனை செவிமடுக்க முடியாது.

agaram.lk

48. வெகுசன ஊடக கருத்தாக்கத்தின் படி புலமைசார் சொத்துடமைச் சட்டம் மற்றும் இலங்கை பத்திரிகை சபைச்சட்டம் ஆகியன தொடர்புபடும் எண்ணக்கருவின் கருத்தாக்கத்தினை முன்வைத்தோர்
   1) ஜோன் மில்ரன் தோமஸ் ஜெபர்சன்
   2) வில்பர் ஷ்ராம், டெக்கார்டே
   3) ஏஞ்சல், மாக்கியவல்லி
   4) வில்பர் ஷ்ராம், ஜோசப் கோயபல்ஸ்
   5) வில்பர் ஷ்ராம், வில்லியம் ரிவர்ஸ்

49. இலங்கையில் வெகுசன ஊடகங்கள் ஆரம்பித்த செயற்பாடானது வரலாற்றியல் வளர்ச்சியில் பொற்காலம் ஆகும். அந்த வகையில் புதிய ஊடகங்களின் தோற்றம் நிகழ்ந்த காலகட்டத்தினை குறிப்பது.
   1) காலணித்துவ ஆட்சிகாலம் 2) நவீன புரட்சி காலம்
   3) சுதந்திரத்திற்கு பின்னரான காலம் 4) சுதந்திரத்திற்கு முன்னரான காலம்
   5) நவகாலணித்துவ ஆட்சிக்காலம்

50. ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவையை பிரதிபலிக்காதது.
   1) ஊடக உள்ளடக்க இயல்பையும் நிகழ்ச்சி நிரலையும் வெளிக்காட்டாது.
   2) புலனுண்பு உயர்மட்டத்தில் வைத்துக் கொள்ளல்.
   3) ஊடகத்தின் சமூக வகிபங்கு கலாசார தாக்கம் பற்றிய போக்குகளை அறியச்செய்தல்.
   4) மக்களை மந்த நிலையிலிருந்து செயற்படும் நிலைக்கு மாற்றியமைத்தல்.
   5) படைப்பாளிகள் தமது ஆக்கங்கள் தொடர்பில் பூரண அறிவை பெறுதல்.

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**

FWC

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

| | | |
|---|---|---|
| **தரம் :- 13 (2019)** | **தொடர்பாடலும் ஊடககற்கையும் II** | **மூன்று மணித்தியாலம் மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்** |

## பகுதி II

**அறிவுறுத்தல் :-**

❖ **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.**

**01. தொடர்பாடல் ஓர் செயன்முறையாகும்.**

1) ஆட்களிடைத் தொடர்பாடலின் அடிப்படைப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
2) நாட்டார் படைப்புக்களின் (Folk lore) வடிவங்கள் நான்கினைப் பெயரிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விவரிக்குக.
3) கூட்டுத் தொடர்பாடலின் அடிப்படைப் பண்புகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டு பற்றி விவரிக்குக.
4) தொடர்பாடலின் நான்கு எண்ணக்கருக்களினை பெயரிட்டு அவற்றினை பற்றிச்சுருக்கமான விபரிப்புக்கள் தருக.

agaram.lk

**02. பாடசாலை ஊடகக் கழகத்தின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டிற்கு உள்ளக மற்றும் வெளியக குழுக்களை அமைத்தல் அவசியமானது.**

1) பாடசாலை ஊடககழகத்தின் உள்ளககுழுவிற்கு நியமிக்கப்பட கூடிய நான்கு நபர்களைப் பெயரிடுக?
2) உங்கள் பாடசாலையில் குழுச்செயற்றிட்டம் ஒன்றுக்காக நீர் மேற்கொண்ட தகுந்த அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றினைப் பெயரிட்டு அவ்வாறான அபிவிருத்திச் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டு. அவற்றுள் ஒன்று பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.
3) உமது பாடசாலை ஊடககழகத்தினால் வெளியீடு செய்யப்படும் செய்திப்பத்திரிகைக்கு நேர்காணல்கள் உபயோகிப்பது பொருத்தமானது என நீங்கள் கருதுகின்றீர்கள். அவ்வாறான நேர்காணல்களின் முக்கியத்துவத்தை இரண்டு அம்சங்களின் அடிப்படையில் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் தந்து விபரிக்குக.

4) அ) மாற்று ஊடகங்களின் (Alternative media) பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) பூகோள மயமாக்கல் தகவல் பெறுவதில் உள்ள சிரமங்களை குறைத்துள்ளதோடு இதன் விளைவாக சமூக ஊடகங்கள் அபரீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. சமூக ஊடகங்களின் சாதகபாதக அம்சங்களினை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்கு குறையாது சிறுகட்டுரை வரைக?

**03. மனிதன் தனது கருத்தை வெளியிட பயன்படுத்திய சக்தி வாய்ந்த உபகரணம் மொழி ஆகும்.**

1) கேட்டல் தேர்ச்சியை பாதிக்கும் நான்கு விடயங்களைப் பெயரிடுக.

2) அ) சுய எண்ணக்கரு பற்றி ரொஜர்சினால் முன்வைக்கப்பட்ட விளக்கத்தினை தருக.

ஆ) பண்பாட்டு அதிர்வு தொடர்பாக சிறுவிளக்கம் தருக.

3) வானொலி ஊடகத்தில் மொழி பயன்படுத்தப்படும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிட்டு அம்மொழிப்பாவனை எவ்வாறு பத்திரிகை ஊடக மொழிப்பாவனையில் இருந்து வேறுபடுகின்றது என்பது தொடர்பில் கருத்துரைக்குக.

4) வெகுசன ஊடகச் செயன்முறையில் தணிக்கை மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக.

**04. ஒரு நாட்டின் சூழலுக்கு இசைவான அபிவிருத்தியே அந்நாட்டின் பேண்தகு நீடித்து நிலைத்து நிற்கும் அபிவிருத்தியாகும்.**

1) அபிவிருத்தி பற்றி டானியல் லேனர் அல்லது டட்ளி சியஸ் அவர்களினால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கத்தை தருக.

2) அபிவிருத்தி தொடர்பாடல் செயற்றிட்டம் ஒன்றில் முன்மொழிவு திட்டம் மிக முக்கியமானது ஆகும். முன்மொழிவு (Development proposal) ஒன்றில் உள்ளடங்கும் படிநிலைகளினைக் குறிப்பிட்டு சிறு விளக்கம் தருக.

3) அ) காந்தியடிகளின் அபிவிருத்தி தொடர்பில் பாவனையில் உள்ளடக்கப்படும் விடயங்கள் பற்றிக் குறிப்பிடுக.

ஆ) இலங்கையை அடிப்படையாக கொண்டு அபிவிருத்தி தொடர்பாடல் பாவனையில் மக்கள் ஊடக மாதிரியின் செயற்பாடு தொடர்பில் ஆராய்க.

4) வெகுசன ஊடகங்களில் வன்முறை சித்தரிக்கப்படும் ஆற்றலை விமர்சன ரீதியாக ஆராய்க.

**05. தற்காலத்தில் அனைத்து கற்கை துறைகளிலும் சிறப்பிடம் பெறும் கற்கையாக உளம் பற்றிய புரிதல் காணப்படுகின்றது.**

1) தனியாள் ஒருவரின் உளரீதியான செயற்பாடுகளினால் ஏற்படும் தவறான பழக்கவழக்கங்கள் நான்கு தருக.

2) முரண்பாட்டு நிலமை ஒன்று தோற்றம் பெறுவதற்கு ஏதுவான காரணிகள் நான்கினைக் குறிப்பிட்டு அதனைத்தீர்த்து வைக்கும் தலையீட்டாளரின் இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

3) தனியாள் ஒருவரின் உளரீதியில் தாக்கம் ஏற்படுவதற்கான நான்கு காரணிகளை குறிப்பிட்டு அவற்றிலிருந்து விடுதலை அடைவதற்குரிய நான்கு வழிமுறைகளை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டு பற்றி விளக்குக.

agaram.lk

4) வீட்டின் சமாதானம் மற்றும் சகவாழ்வு வீழ்ச்சியுறுவதன் விளைவாக குடும்பத்தில் தெரியக்கூடிய இரண்டு ஆரோக்கியமற்ற குணங்குறிகளை குறிப்பிட்டு அவற்றினால் தொடர்பாடலுடன் தொடர்புடையதாக உருவாகும் எதிர்விளைவுகளை விளக்குக?

***06.***

1) ஊடக விளங்கறிவில் உள்ளடக்கப்படும் திறன்கள் எவை?
2) ஊடக விளங்கறிவின் எல்லைகள் மற்றும் அதன் அங்கங்கள் தொடர்பில் நான்கு விடயங்களினைக் குறிப்பிட்டு ஒன்று பற்றி விளக்குக?
3) அ) உள்ளக கலாசாரம் மீது இலத்திரனியல் ஊடகம் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் நான்கு விடயங்களை குறிப்பிடுக.

   ஆ) பிரசித்தமான பண்பாட்டின் நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்று பற்றி சிறுவிளக்கம் தருக.
4) தகவல் பரிமாறும் செயலொழுங்கில் முறைசாரா தகவல் பரிமாற்றத்தின் இயல்புகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றின் வகைப்பாடுகள் பற்றி விளக்குக.

***07.***

1) பாரம்பரிய (நாட்டார்) ஊடகங்களின் பொதுவான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
2) ஊடக விமர்சகர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் எவை?
3) பெறுநரை மையமாகக் கொண்ட படைப்பாக்கச் செய்திப்படுத்துதல் என்றால் என்ன என்பதனைக் குறிப்பிட்டு படைப்பாக்க பூர்வமான முன்வைத்தல் முறைகள் நான்கு தருக.
4) ஊடக விமர்சனம் சமூகத்திற்கு அவசியமானதொன்றாகும். அந்த வகையில் ஊடக விமர்சனம் மேற்கொள்ளப்படும் அணுகு முறைகளை(பிரவேசங்கள்) குறிப்பிட்டு அவற்றுள் இரண்டு பற்றி தகுந்த உதாரணங்களுடன் விபரிக்குக?

agaram.lk